## 18. மரத்தைக் காத்த கிளி.

அந்த ஆலமரத்தில் பல பறவைகள் வாழ்ந்தன.
அதன் விழுதுகளைச் சிறுவர்கள் பிடித்துக் கொண்டு ஊஞ்சல் ஆடுவர்.
பலர் அதன் நிழலில் விளையாடுவர், தூங்குவர்.
ஒரு முறை பறவைகளைப் பிடிக்க வந்த வேடன் ஒருவன் வில்லில் அம்பை வைத்து ஒரு பெரிய கொக்கு மீது ஏவினான்.
கொக்கோ பறந்து விட்டது.
அம்போ மரத்தின் மீது குத்தி அப்படியே நின்று விட்டது.
அந்த அம்பில் விஷம் தோய்த்து இருந்தது.
விஷம் ஏறிய மரமும் மெதுவாக வாடி வாடிக் காய்ந்து சருகானது.
இதனால் பல பறவைகளும் வேறு இடம் தேடிச் சென்றன.
ஆனால் ஒரு கிளி மட்டும் மரத்தை விட்டுப் போகாமல் அங்கேயே வாழ்ந்தது.
அது தினமும் மரம் மீண்டும் தளிர வேண்டும் என்று தெய்வத்திடம் வேண்டியது.
ஒரு நாள் அவ்வழியே ஒரு முனிவர் வந்தார்.
அவர் மரத்தையும் கிளியையும் பார்த்தார். அவருக்கு அவற்றின் பரிதாப நிலை புரிந்தது.
கிளியை வேறு இடம் தேடிச் செல்ல அறிவுரை கூறினார்.
அதற்குக் கிளி, "ஸ்வாமி! நான் பிறந்து வளர்ந்து வாழும் இந்த மரம் சாகும் போது நன்றி மறக்காமல் அதை விட்டுச் செல்ல எப்படி முடியும்?" என்றது.
கிளியின் உண்மையான ஜீவகாருண்யத்தை உணர்ந்த முனிவரும் தன் தெய்வீக சக்தியால் ஒரு மூலிகை மருந்தை அரைத்து மரத்தின் வேரில் தண்ணீரில் கலந்து ஊற்றினார்.
சில நாட்களில் விஷம் தணிந்து மரமும் தளிர் விட்டது.
கிளியோ நன்றி கூறி முனிவரை வணங்கியது.